**அரசாங்க அறிவித்தல்.**
**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**
**தேசிய மீலாதுன் நபி விழா – 2019**

2019 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேசிய மீலாத் நபி விழாவினை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவும் இணைந்து, பாடசாலை மாணவர்களுக்கிடையில் பின்வரும் பிரிவுகளில் போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளன.

**(1) ஆரம்ப பிரிவு:-**தரம் 4,5 (2) கனிஷ்ட பிரிவு :- தரம் 6,7,8 (3) இடைநிலை பிரிவு:- தரம் 9,10,11 (4) சிரேஷ்ட பிரிவு:- தரம் 12.13

- **ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும் போட்டிகள்:-** கிராஅத்,ஹிப்ழ்,பேச்சு ,கலாச்சார போட்டிகள்
- **ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான போட்டிகள்:-** கட்டுரை, சிறுகதை, கவிதை, அறபு எழுத்தணி

ஒரு போட்டியாளர் கீழ் குறிப்பிடும் போட்டிகளில் (கலாசார போட்டிகள் தவிர) ஒரு போட்டியில் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என்பதுடன் சிரேஷ்ட பிரிவு தவிர்ந்த ஏனைய பிரிவுகளில் தேசிய ரீதியாக கடந்த வருடம் முதலாம் இடத்தினை பெற்றவர்கள் மீண்டும் அதே பிரிவில் இப்போட்டிகளில் பங்கு பற்ற முடியாது என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

| போட்டி | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| **கிராஅத்**<br>(குர்ஆனை பார்த்து தஜ்வீத் முறைப்படி இனிமையாக ஓதுதல் வேண்டும்)<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | ஜுஸ்உ அம்ம 30ஆவது ஜுஸ்உ (جزء ثلاثين ( جزء عم<br>(10 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 6,7,8 | கனிஷ்ட | தபாரகல்லதி 29 ஆவது ஜுஸ்உ الجزء التاسع والعشرون (جزء تبارك الذي )<br>(12 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 9,10,11 | இடைநிலை | ஸூரா வாகிஆ, ஸூரா யாஸீன் , ஸூரா ஸஜதா, ஸூரா ஹுஜ்ராத், ஸூரா ரஹ்மான்<br>سورة الواقعة، سورة يس، سورة السجدة، سورة الحجرات، سورة الرحمن<br>(15 வசனங்களுக்கு குறையாமல்) |
| | 12,13 | சிரேஷ்ட | ஸூரா பகரா, ஸூரா ஆலு இம்ரான், ஸூரா நிஸா<br>سورة البقرة ، سورة آل عمران، سورة النساء<br>(15 வசனங்களுக்கு குறையாமல்) |
| **ஹிப்ழ் குர்ஆன் (மனனப் போட்டி)**<br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | :-ஸூரா நாஸ் தொடக்கம் ஸூரா ஷம்ஸ் வரை (سورة الناس )( سورة الشمس) |
| | 6,7,8 | கனிஷ்ட | -ஸூரா நாஸ் தொடக்கம் ஸூரா ஹாஸியா வரை (سورة الناس) (سورة الغاشية) |
| | 9,10,11 | இடை நிலை | :-ஸூரா நாஸ் தொடக்கம் ஸூரா நப.:. வரை (.سورةالناس)( سورة النبأ) |
| | 12,13 | சிரேஷ்ட | ஜுஸ்உ 29 ( تبارك الذي,) ஜுஸ்உ 30 ( جزء عم) |

| போட்டி | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| பேச்சு<br><br>(பேச்சு தமிழ் ,சிங்களம் ஆங்கிலம், அரபு மொழிகளில்நடைபெறும்) (ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | **நீரைப் பாதுகாப்போம்** ජලය සුරකිමු Let us protect Water نحافظ على الماء<br>(04 நிமிடங்கள்) |
| | 6,7,8 | கனிஷ்ட | பொதுச் சொத்துக்களை பாதுகாப்போம் පොදු දේපොළ සුරකිමු Let us protect Public Properties نحافظ على الممتلكات العامة<br>(05நிமிடங்கள்) |
| | 9,10,11 | இடை நிலை | 1. **தாய் நாட்டை நேசிப்போம்** මව් බිමට ආදරය කරමු Let us Love our Motherland نحب الوطن<br>2. **குழந்தை வளர்ப்பில் முஸ்லிம் பெண்ணின் வகிபாகம்** දරුවන් හදා වඩා ගැනීමේ ලා මුස්ලිම් කාන්තාවගේ භූමිකාව دور المرأة المسلمة تجاه تربية الأبناء Role of Muslim woman in raising the children<br><br>(இரு தலைப்புக்களில் ஏதேனும் ஒன்றில் தயாராக இருத்தல் வேண்டும்)<br>(07 நிமிடங்கள்) |
| | 12و13 | சிரேஷ்ட | 1. **தேசிய ஒருமைப்பாட்டிற்கு முஸ்லிம் இளைஞர்களின் வகிபாகம்** ජාතික ඒකාබද්ධතාවයේ මුස්ලිම් තාරුණ්‍යයේ භූමිකාව Role of Muslim youth for National Integration .دور الشباب المسلم في الاندماج الوطني<br>2. **இஸ்லாத்தின் பார்வையில் நடுநிலை பேணல்** මැදුම්පිළිවෙත ඉස්ලාමීය දෘෂ්ටි කෝණයෙන් Being neutral as an Islamic view الاعتدال في نظر الإسلام<br><br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்) (10நிமிடங்கள்) |

| போட்டி | தரம் | பிரிவு | தலைப்பு |
|---|---|---|---|
| **கட்டுரை**<br><br>(தமிழ் ,சிங்களம், ஆங்கில மொழிகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்) | 4,5 | ஆரம்ப | ஆசிரியர்களை மதிப்போம் ගුරුවරුන්ට ගෞරව කරමු<br>Let us respect the Teachers<br><br>(15 வாக்கியங்கள)  (01 மணித்தியாலம்) |
| | 6,7,8 | கனிஷ்ட | இஸ்லாம் வலியுறுத்தும் சகோதரத்துவம ඉස්ලාම් ධර්මය අවධාරණය කරන සහෝදරත්වය Brotherhood which Islam Insists<br><br>(200 சொற்கள)  (01.30 மணித்தியாலம்) |
| | 9,10,11 | இடைநிலை | 1. போதைப்பொருளை ஒழிப்பதில் இஸ்லாத்தின் வகிபாகம் මත් ද්‍රව්‍ය තුරන් කිරීමේ ලා ඉස්ලාම් ආගමික භූමිකාව Role of Islam in eradicating Drugs<br>2. பௌதீக சூழலைப் பாதுகாப்பதில் இஸ்லாத்தின் பங்கு පරිසරය සුරැකීමේ ලා ඉස්ලාම් ආගමික ඉගැන්වීම. Role of Islam in protecting the Environment<br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்)<br>(300 சொற்கள் ) (2 மணித்தியாலம) |
| | 12,13 | சிரேஷ்ட | **1.** நற்பிரஜைகளை உருவாக்குவதில் பெண்ணின் பங்கு යහපත් පුරවැසියන් බිහි කිරීමේ ලා කාන්තාවගේ දායකත්වය Role of Woman on creating good citizens<br>**2.** ஆரோக்கியமான சமுதாயத்தினை உருவாக்குவதில் இஸ்லாமிய வழிகாட்டல்கள் නිරෝගිමත් සමාජයක් බිහි කිරීමේ ලා ඉස්ලාමීය මග පෙන්වීම Guidance of Islam for creating healthy society<br>(இரு தலைப்புக்களுக்கும் தயாராக இருத்தல் வேண்டும்)<br>(400 சொற்கள் ) (2.15மணித்தியாலம்) |
| **சிறுகதை**<br><br>(சிங்களம் தமிழ் மொழி மூலம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்)<br>(இஸ்லாமிய வரையறைக்குள் அமைந்திருத்தல் வேண்டும் ) | 9,10,11 | இடைநிலை | தன்னம்பிக்கை ආත්ම විශ්වාසය<br><br>(350 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) (3.00மணித்தியாலம்) |
| | 12,13 | சிரேஷ்ட | பொறுமையே வெற்றி ඉවසීමය සැනසීම<br><br>(500 சொற்களுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) (3.00 மணித்தியாலம்) |

| போட்டி | தரம் | பிரிவு | தலைபப்பு |
|---|---|---|---|
| **கவிதை**<br><br>**(தமிழ் மொழி மூலம் மட்டும்** ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்)<br><br>(இஸ்லாமிய வரையறைக்குள் அமைத்திருத்தல் வேண்டும்) | 9,10,11 | இடைநிலை | முத்தான முதியோர்கள்<br>30 அடிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்<br>(1.30மணித்தியாலம்) |
| | 12,13 | சிரேஷ்ட | ஐக்கியம்<br><br>60அடிகளுக்கு குறையாமல் இருத்தல் வேண்டும (2 மணித்தியாலம்) |
| **அறபு எழுத்தணி**<br><br>(ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவாக நடைபெறும்)<br><br>வெள்ளை நிற பிரிஸ்டல் அட்டையில் கறுப்பு மையினால் வரைதல் வேண்டும்.விலங்குகள் வரையக் கூடாது அலங்காரங்கள் யாவும் அறபு எழுததுக்களாலேயே அமைய பெற்று இருத்தல் அவசியம் | 9,10,11 | இடைநிலை | فاذكروني أذكركم<br>( 3.00 மணித்தியாலம) |
| | 12,13 | சிரேஷ்ட | ألا بذكر الله تطمئن القلوب<br><br>( 3.00 மணித்தியாலம) |

| போட்டிகள் | தரம் | பிரிவு | நிகழ்ச்சி | விதி முறைகள் |
|---|---|---|---|---|
| 8.இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சிகள்(திறந்த போட்டி)<br><br>(இஸ்லாமிய பாரம்பரிய கலாசாரத்தை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாகளுவும் இஸ்லாமிய வரையறைக்கு உட்பட்ட ஆடை அலங்காரமாகவும் அமைதல் வேண்டும்) ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியாக நடைபெறும் | 4,5 | ஆரம்ப பிரிவு ஆண் | **அறபு மொழி கஸீதா நபி (ஸல்)அவர்களை புகழ்ந்து பாடும் கஸீதாக்கள்** | 06 மாணவர்கள் பின்னணி ஒலி, ஒளியின்றி அரபு மொழி மூலம்˙ கஸீதா<br>(றபானை மாத்திரம் பக்கவாத்தியமாக பயன்படுத்தலாம்)<br><br>(07நிமிடங்கள்) |
| | | ஆரம்ப பிரிவு பெண் | | |
| | 6,7,8 | கனிஷ்ட பிரிவு பெண் | | |
| | | | | |
| | 6.7.8 | கனிஷ்ட ஆண் | இஸ்லாமிய அகீதாவுக்கு முரண்படாத பாடலுடன் களிகம்பு ( 07 நிமிடம்) | 08 மாணவர்கள் (கம்பினையும் ,ஒரு மணியையும் மாத்திரமே பயன்படுத்த முடியும்) |
| | 9,10,11 | இடைநிலை ஆண்கள் | கிராமிய பாடல்களுடன் களிகம்பு<br><br>(10நிமிடங்கள் | |
| | 9,10,11 | இடைநிலை பெண்கள் | இஸ்லாமிய கருத்தொன்றை தெளிவுபடுத்தும் கதம்பம் உரைச்சித்திரம் | 07 மாணவிகள<br>உரையாடலில் அனைத்து மாணவர்களும் பங்கேற்க வேண்டும் , உடல் மொழி (Body Launguage) பயன்படத்தலாம் ஆனால் நாடக பாணியில் அது இருத்தல் கூடாது.<br>. (10நிமிடங்கள்) |
| | 12,13 | சிரேஷ்ட ஆண்கள் | சமூக நாடகம்<br>(இஸ்லாமிய வரையறைக்கு உட்பட்டதாக அமைந்திருத்தல் வேண்டும்) | 11 மாணவர்கள்<br>(போட்டியின் போது நாடகப்பிரதியினை மத்தியஸ்தர்களிடம் கையளித்தல் வேண்டும்)<br>(15நிமிடங்கள்) |
| மேற்குறிப்பிட்ட 07 கலாசார போட்டிகளில் ஒரு பாடசாலை இரு போட்டிகளில் மாத்திரமே பங்குபற்ற முடியும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும் | | | | |

பொது விதிகள்

- அனைத்து ஆக்கங்களும் இஸ்லாமிய வரையறைக்குள் உட்பட்டதாக அமைதல் வேண்டும்
- ஆரம்ப போட்டிகள் முறையாக பாடசாலை மட்டம், வலய மட்டம், மாகாண மட்டம் என்ற ரீதியிலும், இறுதிப் போட்டிகள் தேசிய ரீதியிலும், நடைபெறும்.
- எழுத்துப் போட்டிகளில் (கட்டுரை,சிறுகதை, கவிதை , எழுத்தணி) மாகாண ரீதியில் முதலாம் இடம் பெற்ற போட்டியாளர்கள் மீண்டும் தேசிய ரீதியில் பங்கு பற்ற வேண்டும் என்பதினையும் கவனத்தில் கொள்ளவும்.
- மேற்கூறப்பட்ட விபரங்களை உள்ளடக்கிய பாடசாலைகளின் விண்ணப்பப்பத்திரங்களை அட்டவணைப்படுத்தி 12x8 அங்குல தாளில் தயாரித்து (பெயர் முகவரிகள் , தொலைபேசி இலக்கம் ஆங்கிலத்தில் இருப்பது விரும்பத்தக்கது) அதனை பாடசாலை அதிபர் அத்தாட்சிப்படுத்தி மத்திய , கிழக்கு , மேல், வடமேல் , சப்ரகமுவா மாகாணங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகள் உரிய வலய கல்விப் பணிப்பாளருக்கும் ஏனைய மாகாணங்களை சேர்ந்த விண்ணப்பதாரிகள் மாகாண கல்விப் பணிப்பாளருக்கும் **2019.**04.18 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
  (தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் மீலாத் போட்டி 2019 என குறிப்பிடவும்)
- மாகாண ரீதியாக நடாத்தப்படும் போட்டிகள் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். தேவைப்படும் பட்சத்தில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினதும், கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைப்பிரிவின் பணிப்பாளரினதும் ஆலோசனையை பெற்றுக்கொள்ளலாம்.
- சகல மாகாணங்களினதும் பெறுபேறுகள் 201**9.07.25** ஆம் திகதிக்கு முன்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.
- இப்போட்டிக்குரிய விண்ணப்படிவத்தினை www.muslimaffairs.gov.lk எனும் எமது இணையதள முகவரியில் பெற்றுக் கொள்ள முடியும்

பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 டி.பி ஜாயா மாவத்த கொழும்பு -10
தொலைபேசி இல:- 0112669997 0112667909